Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் .**

**திருவெண்ணெய்நல்லூர்.**

CC.No. 583/2024

**2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.7-வது நபரின் வாக்குமூலம் (1969-ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 7 | தொழில் | - | முதுநிலை அவசர சிகிச்சை மருத்துவர் |
| பெயர் | - | மருத்துவர் ராஜு | வட்டம் | - | விழுப்புரம் |
| த/பெ | - | பெருமாள் | சமயம் | - | |
| கிராமம் | - | விழுப்புரம் | வயது | - | 45 |
| சாதி | - | | | | |

| | |
|---|---|
| நாள் ( Dated): 06.02.2026 | |
| **நீதிமன்ற புள்ளி ( IN COURT POINT)** | |
| இடம் ( Venue) | -திறந்த நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர் |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | - தலைமை எழுத்தர், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர். |
| இந்த வழக்கில் வழக்கறிஞர்கள் | அரசுக்காக – திரு. ஐ. பாரூக் ஷா, பி.ஏ., எல். எல்.எம்., அரசு உதவி வழக்கறிஞர், நிலை-2 |
| | எதிரிக்காக திரு. V.சுரேஷ் பாபு, வழக்கறிஞர், |
| **தொலைதூர புள்ளி (IN REMOTE POINT)** | |
| இடம் ( Venue) | அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, முண்டியம்பாக்கம் , விழுப்புரம் |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | மருத்துவர் ராஜு. அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, முண்டியம்பாக்கம் , விழுப்புரம் |
| சாட்சி ( Witness) | அசா.7 |

சாட்சி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, முண்டியம்பாக்கம் , விழுப்புரத்திலிருந்து நீதிமன்ற

காணொலி சாதனம் மூலம் விசாரணை செய்யப்படுகிறார்.

( எதிரிஆஜர்)

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது முண்டியம்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் முதுநிலை அவசர சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.08.2023 மாலை 04.00 மணியளவில் நான் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது பா.கிள்ளனூர் , மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த 48 வயது மதிக்கத்தக்க ஆண் நபர் ஜெயராமன் மகன் ஜெயமுருகன் என்பவர் சந்தோஷ் என்பவருடன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தார்.

2. அவர் தன்னை அதே தேதியில் 11.00 மணியளவில் தெரிந்த ஒரு ஆண் நபர் திருவெண்ணெய்நல்லூர் அருகில் வைத்து தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. தலை மற்றும் இடது தோள்பட்டையில் வலி இருப்பதாக கூறினார். அத்துடன் வலி உணர்வு இருப்பதாக தெரிய வந்தது. அவருக்கு முதல்நிலை சிகிச்சை அளித்து உள்நோயாளியாக சேர அறிவுரை வழங்கினேன்.ஆனால் அவர் புறநோயாளியாகவே சிகிச்சை மேற்கொண்டார். அவருக்கு ஏற்பட்ட தலை மற்றும் நெஞ்ச பகுதியில் சி.டி.ஸ்கேனில் நார்மலாக காணப்பட்டது.

2. அதன் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கினேன். **நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆகும்**. போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

திருவெண்ணெய்நல்லூரில் குறிப்பாக எங்கு வைத்து தாக்கினார்கள் என்று விபத்து பதிவேட்டில் குறிப்பாக சொல்லவில்லை என்றால் திருவெண்ணெய்நல்லூரில் மட்டும் என்று சொல்லியுள்ளார், எந்த இடம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வலி உணர்வு இருப்பதாக சொல்வது பாவனையாக கூட இருக்கலாம் என்றால் டென்டர்நஸ் என்பது நாங்கள் கண்டுபிடித்து சொல்வது பொய்யாக இருக்க வாய்ப்பில்லை. நான் தவறாக சொல்கிறேன் என்றும் சும்மா பாவனையாக கூட சொல்லியிருக்கலாம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.